# கொள்ளவும் விற்கவுங் கூடாதபடி




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# வெளிப்படுத்தின விசேஷம் 13:16-18

16. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

17. அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

18. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

*இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:*

இங்கு நம்மிடையேயுள்ள சபைகள் எல்லாம் மூடப்பட்டு, ஐக்கிய ஆலோசனைச் சங்கத்தின் அனுமதி அல்லது சான்றிதழ் இல்லாமல் பேசவோ, ஆராதனை நடத்தவோ முடியாத ஒரு நிலைமையுண்டாகும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

10. சரி. இந்த பெந்தெகோஸ்தே கூட்டமும், சுவிசேஷக் கூட்டமும் ஒன்றாக ஊழியம் செய்து ஒரு ஸ்தாபனமாக இணைந்து, பின்பு உலக ஐக்கிய ஆலோசனை சபையில் ஒரு அங்கமாக மாறும் என்பதனை நான் முன்னறிவிக்கிறேன்.

ஏற்கனவே அவர்கள் அவ்விதமாயிருக்கின்றனர்.

**அவர்கள் மூலமாக மற்ற சபைகளுக்கு ஒரு ஆக்கப்பூர்வமான தடையுண்டாக்கப் பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட அச்சபைகளைச்** (union of churches) **சார்ந்தது**

**மட்டுமே நிலைத்திருக்கத்தக்கதான நிலைமை ஒன்று வருகிறதாயிருக்கிறது.**

**ரோமமார்க்கமான மிருகத்தின் முத்தி ரையைப் பெற்று கொள்ளாதவர்கள் வாங் கவோ, விற்கவோ கூடாத அளவிற்கு ஒரு தடை வரப்போகிறது என்று வேதம் கூறு கிறது.**

மிருகத்திற்கு ஒரு சொரூபம் கொடுக் கப்பட்டது.

அதுதான் கத்தோலிக்க மார்க்கத்திற்கு விரோதமாய் பிரிந்த பிராடெஸ்டெண்ட் மார்க்கமாகும்.

இந்த சொரூபத்திற்கு (ஸ்தாபன சபை கள் - தமிழாக்கியோன்) பேசத்தக்கதாக

ஆவியையும் சத்துவத்தையும் கொடுக்க மிருகம் வல்லமையுள்ளதாயிருந்தது.

ஸ்தாபன சபைகளாக ஐக்கிய ஆலோசனை சபையில் அவர்கள் சேரும்போது நடைபெறப்போவது அதுவே.

11. இங்கு அநேக வாலிபர்கள் இருக்கின்றீர்கள். ஒருவேளை இன்று பகல் அல்லது அடுத்த வருடம் இயேசு வரக் கூடும். அவர் எப்பொழுது வருவார் என்று நான் அறியாதவனாயிருக்கிறேன்.

ஆனால் ஒன்றை ஞாபகம் கொள் ளுங்கள்; அவர் வருவதை நான் பார்க்க ஜீவித்திராவிட்டால், (அவ்விதம் அவர் வருவதைக்காண நான் ஜீவித்திருப்பேன் என்று நம்புகிறேன்) இந்த என்னுடைய

வார்த்தைகள் உங்கள் செவிகளையும் இரு தயங்களையும் விட்டு அகலாதிருப்பதாக.

பாருங்கள்? நான் இவைகளை கர்த்த ருடைய நாமத்தினால் கூறுகிறேன்.

**ஒரு சங்கம்** (union) **போன்று அது அமைந்து பின்பு ஆக்கப்பூர்வமான ஒரு தடையையுண்டாக்கும்;** அவ்விதமாகவே ஸ்தாபனங்கள் முதிர்ச்சியடையும் என்று நான் என் இதயப்பூர்வமாக விசுவாசிக் கிறேன்.

**இங்கு நம்மிடையேயுள்ள சபைகள் எல்லாம் மூடப்பட்டு, ஐக்கிய ஆலோ சனைச் சங்கத்தின் அனுமதி அல்லது சான்றிதழ் இல்லாமல் பேசவோ, ஆரா**

**தனை நடத்தவோ முடியாத ஒரு நிலைமை யுண்டாகும்.**

12. இப்பொழுதே, அவ்விதமான காரியங்களும் கட்டுப்பாடுகளும் ஸ்தாபன சபைகளில் உண்டாயிருக்கின்றன.

ஆம் ஐயா, அதை நீங்கள் பெற்று கொள்வீர்கள் என்பதற்கு அறிகுறியாக அவை அங்கேயுண்டாயிருக்கின்றன.

அதிலேதான் அது முடிவடையும்.

கிறிஸ்துவின் ஒரு ஊழியக்காரனாக, நான் பெற்ற வார்த்தையின் வெளிப்பாட்டின் புரிந்துகொள்ளுதல் மூலமாக ஸ்தாபனங்கள் அவ்விதமான கட்டுப்பாட்டைக் கொண்டு வரும் என்று நான் முன் அறிவிக்கிறேன். எல்லா அடையாளங்களும் முடிவை சுட்டிக் காட்டுகின்றன. அதைக்

குறித்து சற்று முன்புதான் நான் பிரசங் கித்தேன்.

13. புத்தியில்லாத கன்னிகைகளும் கூட எண்ணெய்க்காக கதற ஆரம்பித்து விட் டார்கள். அவள் ஒரு கன்னிகையாயிருந் தாள் என்பதைக் கவனம் கொள்ளுங்கள். அவள் அவ்விதம் ஒரு கன்னிகையானால் அவளும் ஒரு சபையாயிருக்கிறாள். பாருங்கள். அதைக் குறித்து வெளிப்படுத் தின விசேஷம் 17ம் அதிகாரத்தில் கூறப் பட்டதை சற்று பின்பு பார்ப்போம், அவள் ஒரு கன்னிகையானால் அவள் சபை யாகும். சபை என்னப்பட்டது ஒரு கன்னி கையாகும். பவுலும், "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என் னும் ஒரு புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால்," என்று கூறினான். வெளிப்படுத்தின விசேஷத்தில் 17ம்

அதிகாரத்தில் கூறப்பட்ட வேசியும் ஒரு சபையாகும். யோவான் அவள் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டான். ஆனாலும் அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத் தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக் கிறதை அவன் கண்டான். அவளால் கொல்லப்பட்ட பரிசுத்தவான்கள். இது உண்மை.

14. ஹிப்போ நாட்டை சேர்ந்தவரான பரி. அகஸ்டியன் என்பவரின் காலத்தி லிருந்து, ரோமன் கத்தோலிக்க சபை சுமார் 68,000,000 மில்லியன் ப்ராடெஸ்டண்ட் கிறிஸ்தவர்களை தன்னுடைய கொள் கையை ஒப்புக்கொள்ளாததினால் கொல் லப்பட்டனர் என்று புனித தியாகிகளின் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும்

இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்” என்று வேதம் கூறினதில் எந்த விதமான ஆச்சரியமும் இல்லை.



ஐக்கிய சபைகள் என்ற அமைப்பினுள் அவர்கள் தங்களைக் கூட்டி சேர்ப்பார்கள்; பின்பு நம் போன்ற சபையை கிரியை செய்யக்கூடாதவாறு செய்வார்கள் (அவர்கள் அறிந்த வரை). அந்த நேரத்தில் தான் இயேசு தோன்றி யார் மணவாட்டி, யார் மணவாட்டியில்லையென்று காண்பிப்பார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0318 உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து

நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விதைகள் பின்மாரிக் கென இப்பொழுது விதைக்கப்பட்டு விட்டன.

**நினைவில் கொள்ளுங்கள். வெகு விரைவில் ஸ்தாபனங்களின் ஒரு கூட்டு சேர்க்கை உண்டாகப்போகிறது. அது மிகவும் பயங்கரமாயிருக்கும்.**

**ஐக்கிய சபைகள் என்ற அமைப்பினுள் அவர்கள் தங்களைக் கூட்டி சேர்ப்பார்கள்; பின்பு நம் போன்ற சபையை கிரியை**

**செய்யக்கூடாதவாறு செய்வார்கள் (அவர் கள் அறிந்த வரை).**

**அந்த நேரத்தில் தான் இயேசு தோன்றி யார் மணவாட்டி, யார் மணவாட்டி யில்லையென்று காண்பிப்பார்.**

375. நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்தவ நண்பர்களே, நான் ஒரு மனிதன்; நான் தவறுகள் செய்யக்கூடியவன். ஆனால் தேவன் தேவனாயிருப்பதால் தவறு செய்ய முடியாது.

எல்லா எழுதப்பட்ட தீர்க்கதரிசனங் களும் நிறைவேற வேண்டும் என்று இயேசு கூறினார்.

**ஆகவே ஒரு கட்டுபாடு மணவாட்டி யின் மேல் உண்டாகும், என்று வேத வசனத்தில் கூறப்பட்டுள்ளவைகளும் -**

**இதை அவைகளில் ஒன்று - காரியமும் இங்கே நிறைவேற வேண்டும்.**

ஆனால் அத்தகைய கட்டுபாடு உண்டாகும் முன்பு (மிருகத்தின் முத்திரையிடுதல்) மணவாட்டி சபையை எடுக்கத்தக்கதாக தேவன் விதையை விதைக்க வேண்டியவராயிருக்கிறார். இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? விதையானது விதைக்கப் பட வேண்டும். ஸ்தாபன வித்து...இந்த ஸ்தாபனங்கள் மிருகத்திற்கு (ரோம சபை) ஒரு சொரூபத்தை உண்டாக்க வேண்டும்.

**ஆனாலும் அவைகளின் மத்தியில் ஒரு உண்மையான மணவாட்டி இருந்தாக வேண்டும்.**

சபைகள் யாவையும் ஒன்றாக இணைத்து, அவ்வாறு இந்த ப்ராடெஸ்டெண்ட் ஐக்கியத்தை உருவாக்கி, பின்பு, ஏனைய அனைத்து சபைகளையும் நிர்ப்பந்தித்து ஒன்று சேரச் செய்வார்கள். அப்படி சேராவிட்டால், மிருகத்தின் சொரூபத்தை அவர்கள் பெற்றிருக்காமல், விற்கவோ, வாங்கவோ முடியாதபடி செய்துவிடுவார்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1211M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

வேறு ஒரு காரியத்தையும் நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். மிருகத்தின் முத்திரை, நாம் வெளிப்படுத்தின விசேஷம் 13ம் அதிகாரத்தை ஒரு நிமிடம் எடுத்துக்கொள்வோம். வெளிப்படுத்தின விசேஷம் 13:15, அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை அங்கே வாசியுங்கள். வெளி. 13:15.

**"...சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது"** (அது என்னவெனில், "ப்ராடெஸ்

டெண்ட் சபைகளுக்கு. ப்ராடெஸ்டெண்ட் சபைகளுக்குக் கொடுக்கப்பட்டது".

241. அவனுக்கு வல்லமை இருந்தது. ஏனெனில் அவர்கள் ஒரு சொரூபத்தை உண்டாக்கினார்கள். ப்ராடெஸ்டெண்ட் சபைகள் உண்டாக்கின. சபைகளின் ஆலோசனை சங்கம் மூலமாக, ப்ரா டெஸ்டெண்ட் ஐக்கியம் யாவும் இணைக் கப்படுவதற்கான ஒரு ஸ்தானத்தை உண் டாக்கிக் கொண்டிருக்கிறது. உலகிலுள்ள சபைகள் யாவுக்குமான ஒருங்கிணைப் பான அந்த மகத்தான கட்டிடத்தைப் பற்றி எத்தனை பேர்கள் படித்து அறிந்திருக் கிறீர்கள்? நிச்சயமாக. பாருங்கள்? ஐக்கிய நாடுகள் சபையைப் போலவே அதுவும் அங்கே எழும்பியுள்ளது. அவர்கள் யாவ ரும், அசெம்ப்ளிஸ் ஆஃப் காட் சபை யினரும் கூட, அங்கே இணைந்து விட்

டனர். அவர்கள் அங்கே கூடிவிட்டார்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள், பாருங் கள். “நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது'' என்று சொல்லப்பட்டதின் படியே அவர்களுக்குச் சம்பவித்தது. மீண்டும் அதே காரியத்தை நிச்சயமாகவே செய்கிறார்கள். ஏறத்தாழ தங்களுடைய சுவிசேஷ ஊழிய நிலையையே மறு தலிக்கிறவர்களாயிருக்கிறார்கள். இஸ்ர வேலர் ஏனைய ஜாதிகளுக்கு இராஜாக்கள் இருந்ததைப் பார்த்து, ''எங்களுக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தும்'' என்று கேட்டது போல், உலகத்தாரைப்போல் ஆகவிரும்பி, தாங்கள் பெரிதாக ஆகவேண்டும் என்று விரும்புகின்றனர். பாருங்கள்?

**"மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூ**

**பத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூ பத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது".**

**வெளி. 13:15**

242. மிருகத்தினுடைய சொரூபம்: அதாவது "ப்ராடெஸ்டெண்ட் ஸ்தாபனங் கள்" கத்தோலிக்கம் அல்ல. இது அமெ ரிக்காவில் உள்ளது, இதைத்தான் அவர் குறிப்பிடுகிறார். பாருங்கள். ஏனெனில், வெளிப்படுத்தின விசேஷம் 13-ஆம் அதிகாரம் அமெரிக்காவைப் பற்றினதா கும். பூமியிலிருந்து எழும்பி வருகிற மிருகம்... பாருங்கள். ஏனைய மிருகங்கள் யாவும் தண்ணீரிலிருந்து எழும்பி வரு கின்றன. அதன் அர்த்தம் என்னவெனில், "திரள் கூட்டமான ஜனங்கள்'' என்பதாகும்.

ஆனால் இங்கேயுள்ள இந்த மிருகமோ, ஒரு ஆட்டுக்குட்டியை போல் ஜனங்களே இல்லாத பூமியிலிருந்து எழும்பி வரு கிறது; அதற்கு இரு கொம்புகள் உண் டாயிருக்கிறது, அது ஒரு சர்ப்பத்தைப் போல் பேசினது. அவர்கள் அம்மிருகத் திற்கு ஒரு சொரூபத்தை உண்டு பண் ணினார்கள், அது ஐரோப்பாவில் உண் டாயிருந்தது. அதற்கு இங்கே ஒரு சொரூ பத்தை உண்டு பண்ணினார்கள். **சபைகள் யாவையும் ஒன்றாக இணைத்து, அவ்வாறு இந்த ப்ராடெஸ்டெண்ட் ஐக்கியத்தை உரு வாக்கி, பின்பு, ஏனைய அனைத்து சபை களையும் நிர்ப்பந்தித்து ஒன்று சேரச் செய்வார்கள். அப்படி சேராவிட்டால், மிரு கத்தின் சொரூபத்தை அவர்கள் பெற் றிருக்காமல், விற்கவோ, வாங்கவோ முடி யாதபடி செய்துவிடுவார்கள்.**

243. இங்கே என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள்:

**அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும்,**

**அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங்கூடாத படிக்கும் செய்தது.**

**இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடை**

**யவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது, அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு** (இது யார் என்று நாம் அறிவோம்; அதுதான் ரோமச் சபையின் பரம்பரை குருக்களாட்சியின் போப் ஆகும்).

**வெளி. 13:16–18**

244. நான் அங்கே போயிருந்த பொழுது நானே அவருடைய ஸ்தலத்தில், அவருடைய சிம்மாசனத்தை அது இருக்கிற வண்ணமாக கண்டேன். இங்கே கத்தோலிக்க காலத்தின் துவக்கத்தில், 3-ம் போனிபேஸ்-ஐ முதல் போப்பாக அவர்கள் ஏற்படுத்தி அமர வைத்தபோது இருந்தபடியே அச்சிம்மாசனம் அங்கே உள்ளது. அதன்மேல், அங்கே "வைகாரியஸ் ஃபிலியை டியை" (Vicarius Filii Dei)

என்று எழுதப்பட்டிருந்தது. அதன் அர்த்தம் என்னவெனில், "தேவகுமாரனுடைய வைகார்" "டிஜ" "டிஜடி" (Dei, Deity என்றால் தேவன் என்று அர்த்தம். - மொழி பெயர்ப்பாளர்). பாருங்கள். "தேவகுமார னுக்கு பதிலி" அதாவது, தேவகுமாரனைப் போல் உள்ளவர், பூமியில் அவருக்குப் பதிலாக அமர்ந்திருக்கிறார் என்று அர்த்தம் கொள்ளும் பெயராகும். வேதாக மத்தைக் கூட மாற்ற சர்வ வல்லமை படைத்தவர், விரும்பும் எதையும் மாற்றிவிட அதிகாரம் படைத்தவர். எனவே, “மரியே வாழ்க'' என்று கூறும்படி கூறினார். போப் என்ன சொன்னார்? ''நமக்கு 'மரியே வாழ்க' என்று ஏற்படுத்திக் கொள்வோம்'' என்றார். அத்துடன் அது முடிவு பெறுகிறது. ஊ ஊ. "நாம் இன்னின்னதைச் செய்வோம்'' என்று போப் சொன்னால், அதுதான் அதிகார

பூர்வமானது என்கிறார்கள். “தேவனுடைய குமாரனுக்கு பதிலாக அவருடைய ஸ்தானத்தை வகிக்கிறவர்'' என்று கூறுகிறார்கள்.

245. சமீபத்தில் அவர்கள் ஒரு புதிய கொள்கையை வெளியிட்டார்கள்; அதாவது: ''மரியாள் அடக்கம் பண்ணப்படவில்லை, அவள் உயிர்த்தெழுந்தாள்'' என்று போப் கூறினார். மரியாளுடைய கல்லறை இன்னமும் இருக்கத்தான் செய்கிறது; அவளை எங்கே அடக்கம் செய்தார்களோ, அவ்விடத்தை அடையாளம் பண்ணி வைத்திருக்கிறார்கள். ஆனால் போப் சொல்லிவிட்டதால், அது உண்மை என்கிறார்கள். பாருங்கள். ஏனெனில், போப் பிழையற்றவராக இருக்கிறார், அவர் தேவனுடைய குமாரனுக்கு பதிலாக

உள்ளார், அவர் சொல்வது சரிதான் என்று நம்புகின்றனர்.

246. எவராவது, இந்த மிருகமானது யாரைக் குறிக்கிறது, இந்த வல்லமை எங்கிருந்து வருகிறது என்பதை அறிய விரும்பினால், வேதம் கூறுகிறது, ஞான முள்ளவன் எண்களை கணக்குப் பார்க் கக்கடவன் என்று. ஆம், பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்று ஞானமாகும். பாருங் கள்? ''ஞானமுள்ளவன் மனுஷனுடைய இலக்கத்தை கணக்குப் பார்க்கக்கடவன்'' என்று கூறப்பட்டுள்ளது. மிருகமானவனின் இலக்கமானது அறுநூற்று அறுபத்தாறு ஆகும். நீங்கள் அந்த பெயரை எடுத்துக் கொண்டு, அதை அகரவரிசையில் ஒவ் வொரு எழுத்தாக எடுத்து, அவைகளுக்குச் சரியான ரோம இலக்கத்தை எடுத்துப்

பார்த்தால், அதைக் கூட்டுகையில் அறு நூற்று அறுபத்தாறுதான் வருகிறது. அது சரிதான்.

247. "நாம் அந்த மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்குவோம்" என் பார்கள். இந்த தேசத்தில் அவர்கள் ஒரு சொரூபத்தை உண்டாக்கினார்கள். அது தான், ஸ்தாபனங்களின் ஒருமித்து கூட்டு சேர்ந்த சபையின் சமஷ்டியாகும். நிக்கொ லாய் மதஸ்தினர் ஒன்று சேர்ந்து, தங்களை ஸ்தாபனமாக ஆக்கிக்கொண்டுவிட்டார் கள். இறுதியாக அவர்கள் இந்த சகோ தரத்துவ ஐக்கியத்தை இணைத்து, கத் தோலிக்கராக ஆகாமல், ஆனால் சகோதர ஐக்கியத்தில் ஒன்றிணைந்து, கம்யூ னிசத்தை ஒழித்துக்கட்ட முயலுவார்கள்.

248. வேதம் கூறுகிறபடி, தேவனுடைய ஜனங்களுக்கு அவர்கள் இழைத்த கொடுமைகளுக்காக அவர்களைப் பழிவாங்கவே கம்யூனிசத்தை தேவன் எழுப்பினார். அது மிகவும் சரியாக இருக்கிறது. அவர்கள் சிந்திய இரத்தத்தினிமித்தம் பழிவாங்க அவர்கள் ஒரு மணி நேரமளவும் அந்த மிருகத்திற்கு அதிகாரம் அளித்தனர். அந்த வாட்டிகன் நகரை அணுகுண்டோ அல்லது மற்ற எதுவுமோ தாக்குகையில், ரோம குருக்களாட்சி இனி இல்லாமற் போய் விடும். "உலகில் கொல்லப்பட்ட ஒவ்வொரு இரத்த சாட்சியின் இரத்தமும் அவளில் காணப்பட்டது" என்று வேதம் கூறுகிறது. அவள் அங்கே இருக்கிறாள். இங்கே அதற்குரிய சொரூபம் உள்ளது, அதுவே, சபைகளின் மகாசம்மேளனம் ஆகும்.



# அதனின்று விலகியிருங்கள் ! அதை விட்டு வெளியே வாருங்கள் ! அதை விட்டு ஓடிப் போங்கள் !



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-01-18 முரண்பாட்டின் விதை

77. இதை நீங்கள் குறித்து வைத்துக கொள்ளுங்கள். இது ஒலிநாடாவிலும் பதிவு செய்யப்படுகிறது. இதை நிலை வில் கொள்ளுங்கள். நீங்கள் ஆராதிப்பதாகக் கூறும் அதே தேவன் .... அறுவடையின் போது உலக சபை மாநாட்டில் ஒன்று சேரும் இந்த ஜனங்கள்!

நீங்கள் அதற்குள் செல்ல வேண்டும், அதற்கு வெளியே நீங்கள் இருக்க முடி யாது. நீங்கள் தனிப்பட்ட நபராக அதை விட்டு வெளியே வர வேண்டும். இல்லை

யேல், அதற்குள் நீங்கள் செல்லவேண்டும். இதற்கு நடுவாக வேறெதுமில்லை.

அது மிருகத்தின் முத்திரையாயிருக்கும். அந்த முத்திரையை அல்லது முரண்பாட்டை பெறாமல், எந்த மனிதனும் கொள்ளவும் விற்கவும் முடியாது.

அதனின்று விலகியிருங்கள்! அதை விட்டு வெளியே வாருங்கள்! அதை விட்டு ஓடிப் போங்கள்! அதை அதை விட்டு விலகுங்கள்!

கொடூர தண்டனை என்னவென்பதைக் காணவேண்டுமானால் சற்றுப்பொறுங்கள். (சகோ.பிரன்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டுகிறார் - ஆசி) பூமியில் கைவிடப்பட்டவர்கள் என்னவிதமான கொடூரத்தை அனுபவிக்கப் போகின்றனர் என்பதை அப்பொழுது காணலாம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-18 முதலாம் முத்திரை

359. **இப்பொழுது, செல்வத்தின் ஆதிக்கம் அவன் கையில் வந்தவுடன் யூதர்களுடன் அவன் செய்த உடன்படிக்கையை அவன் எழுபதாவது வாரத்தின் பாதியின் மத்தியில்** (கடைசி மூன்றரை வருஷத்தின் மத்தியில் - தமிழாக்கியோன்) **முறிப்பானென்று தானியேல் கூறுகிறான். அதன்பின், சகோதரனே, அவன் என்ன செய்வான். அச்சமயம், உலகத்தின் செல்வமனைத்தும் அவன் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுள்ளதால், உலகிலுள்ள வாணிபமெல்லாம் அவன் கைக்குள் இருக்கும். இந்த சமயத்தில்தான், இரண்டு தீர்க்கதரிசிகள் காட்சியில் எழும்பி 1,44,000 பேரை அழைப்பார்கள். அதன்பின்பு என்ன நேரிடும்? வெளி. 13-ல் கூறியுள்ள மிருகத்தின் முத்திரை**

**போடப்படும். ஏனெனில் உலக வாணிபமெல்லாம் அவன் அதிகாரத்தில் இருக்கும். அதன் பின் என்ன சம்பவிக்கும்? "அந்த முத்திரையிடப்பட்டவன் அல்லாது வேறு யாரும் விற்கவோ கொள்ளவோ முடியாது." என்ற மிருகத்தின் முத்திரை உள்ளே வரும்.** (சகோ.பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டினார் - ஆசி)

360. **கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ்வமயம் சபையானது மகத்தான மூன்றரை வருடகாலம் மகிமையில் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இது நிகழும்போது, நாம் இவ்வுலகில் இருக்கமாட்டோம்.**

**கொடூர தண்டனை என்னவென்பதைக் காணவேண்டுமானால் சற்றுப்பொறுங்கள்.** (சகோ.பிரன்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டுகிறார் - ஆசி) **பூமியில் கைவிடப்பட்ட வர்கள் என்னவிதமான கொடூரத்தை அனு பவிக்கப் போகின்றனர் என்பதை அப்பொழுது காணலாம்.** ஹூம். "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகும். மணவாட்டி எடுக் கப்பட்ட பின்பு, வலுசர்ப்பம் (ரோமாபுரி) தன் வாயிலிருந்து வெள்ளத்தை கைவிடப்பட்ட ஸ்திரீயின் சந்ததியின் மேல் ஊற்றி, அவ ளுடன் போர் செய்கின்றது. அவள் உள்ளே பிரவேசிக்க விருப்பங்கொள்ளவில்லை. ஆகையால் அவள் மிருகத்தை போன்று வேட்டையாடப்படுவாள்" (வெளி.12:13,17).

380. **ஆனால் மணவாட்டி தேவனுடைய கிருபையினால் இரத்தத்தின் கீழ் இருந்ததால், அவள் இதை அனுபவிக்க வேண்டிய அவசிய மில்லாமல் போயிற்று. அவளுக்கு உபத்திரவ**

**காலம் கிடையவே கிடையாது. இனிமேல் சபைக்கு அடுத்ததாக நிகழவேண்டியது எடுக் கப்படுதலாகும். ஆமென் ! ஆமென் !**

---



# செய்தி: 63-03-18 முதலாம் முத்திரை

334. இப்பொழுது கவனியுங்கள். நாம் ஒரு நிமிடம் மறுபடியும் தானியேலுக்குத் திருப்புவோம். நான் உங்களுக்கு ஒன்றை வாசிக்க விரும்புகிறேன்... உங்களால் அதைத் திருப்ப முடியவில்லையெனில்... பரவா யில்லை. நான் தானியேல் 9, 26, 27-ம் வசனங்களை வாசிக்க விரும்புகிறேன். தானி யேலின் ஜனங்களை அழிப்பவன் இவன் தானா, அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை நீங்கள் கவனியுங்கள்.

அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்...

335. பாருங்கள், எழுபது வாரங்களில் அறுபத்திரண்டு வாரங்களுக் குப்பிறகு...

ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற (வரப் போகிற) பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள் (இங்கே சகோ.பிரன்ஹாம் ஜனங்களும், பிரபுவும் (the people and the prince) என்று வாசிக்கிறார்தமிழாக்கியோன்) (அதுதான் அந்த குருக்களாட்சி - heirarchy) அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல் இருக் கும்; முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.

336. உங்களிடம் ஒன்று கேட்க விரும்பு கிறேன், மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிறகு கிறிஸ்து சங்கரிக்கப்பட்டார். அதன் பின் 'ஆலயத்தை அழித்தவன் யார்? யார் அதை அழித்தது?' ரோமாபுரி! நிச்சயமாக. கான்ஸ்டான்ட்டின் அல்லது... இல்லை. மன் னிக்கவும். ரோம தளபதியாகிய தீத்து (Titus) என்பவன். அவன் பிரபுவை அழித்தான். இப்பொழுது கவனியுங்கள். இவனைச் சற்று

கவனியுங்கள். அவன் இந்த சுவர் வரை வந்தான்.

337. இயேசு பிறந்தபோது... வானத்திலுள்ள சிவப்பான வலுசர்ப்பம் அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்து போடும்படிக்கு அவளுக்கு முன்பாக நின்றது. அது சரியா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் - ஆசி) (இயேசுவாகிய) குழந்தை பிறந்தபோது அதைப் பட்சிக்க முயன்றது யார்? ("ரோமாபுரி") ரோமபுரி! பாருங்கள்? அதுதான் அந்த சிவப்பான வலுசர்ப்பம்! இங்கே அந்தப் பிரபு. இங்கே அந்த மிருகம். பாருங்கள்? அவர்களனைவரும் "பிள்ளையைப் பட்சித்துப்போட" நின்று கொண்டிருக்கின்றனர். ஆனால் தேவன் பிள்ளையைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டு, சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி செய்தார். குறிப்பிட்ட காலம் வரை கிறிஸ்து அங்கு தான் இருப்பார்.

பாருங்கள்? இப்பொழுது, அவன் என்ன செய்வான் என்பதைக் கவனியுங்கள்.

338. இப்பொழுது, ஓ, இப்பொழுது, அன்றைக்கு நான் யாரோ ஒருவரிடம் அமெரிக்காவின் பொருளாதார நிலையைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அது சகோ.ராபர்ஸன் (Bro. Roberson) என்று நினைக்கிறேன். அதைப் பற்றி நான் சிறிது காலம் முன்பு உங்களிடையே பிரசங்கித் திருக்கிறேன் என்று நம்புகிறேன். பாருங்கள்? நாம் நமது கடன்களை, வரிப்பணத்தைக் கொண்டு அடைத்து வருகிறோம். கடன் அடைத்துத் தீர்க்க இன்னும் நாற்பது வருடங்கள் செல்லும். நாம் அந்த அளவிற்கு பின் தங்கியுள்ளோம். நீங்கள் எப்போதாவது 'கெயர்' (KAIR) அல்லது 'லைப்லைன்' (Life Line) வானொலி நிலையங்களின் அறி விப்பை வாஷிங்டனிலிருந்து ரேடியோவில்

கேட்டதுண்டா? நாம் பயங்கரமான நிலையில் உள்ளோம். அவ்வளவே.

339. அதற்கு என்ன காரணம்? தங்கம் எல்லாம் வங்கியில் செலுத்தப்பட்டு, அதற் குரிய பாண்டு (Bonds) பத்திரங்களை யூதர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர். அது ரோமாபுரியாயிருக்கப் போகின்றது. இப்பொ ழுது கவனியுங்கள், இந்தப் பெரிய மாடிக் கடைகள் (apartment stores...) யாருக்குச் சொந்தம் என்பதை நாம் அறிவோம். ஆனால், பெரும்பான்மையான உலகத்தின் செல்வம் ரோமாபுரியின் வசமுள்ளது. எஞ் சினவை யூதர்களிடமிருக்கிறது. இப்பொழுது கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவர் இதை எனக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார் என்று பாருங்கள்.

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி (இப்பொ

ழுது கவனியுங்கள்) அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்... அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும், (தமிழ் வேதத்தில் சரியான மொழிபெயர்ப்பல்ல. ஆங்கில வேதத்தில் அவன் (அந்தப் பிரபு) உடன்படிக்கையை உறுதிப்படுத்தி அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான் என்றும், அருவருப்பைப் பரப்ப அவன் முடிவு காலம்வரை பாழாக்குவான் என்றும், பாழாக்கப்படுகிறவர்களின் மேல் அவன் நிர்ணயித்தது ஊற்றப்படும் என்றும் அர்த்தங் கொண்டுள்ளது - தமிழாக்கியோன்).

340. கவனியுங்கள்! ஓ! அது எவ்வளவு சாமார்த்தியமுள்ள காரியம்! அவன் இங்கே இருக்கிறான். இப்பொழுது அந்த காட்சி

என்ன என்றும், இது ரோமாபுரிதான் என்று நாம் அறிந்துகொண்டோம். அவன் வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்பவன் என்று அறிந்தோம். அவன் ஒரு போதகமாகப் புறப்பட்டான் என்று நாம் அறிவோம். அஞ்ஞானரோம மார்க்கம், போப்பாண்டவரின் ரோமன் கத்தோலிக்க மார்க்கமாக மாறி, அதற்கு முடிசூடப்பட்டது.

341. இப்பொழுது கவனியுங்கள்! "கடைசி காலத்தில்"- கிறிஸ்து பிரசங்கித்த காலத்திலல்ல - வாரத்தின் பிற்பகுதியில், நாம் இப்பொழுது தானியேலின் எழுபது வாரங்களைக் குறித்து சிந்தித்தோம். கிறிஸ்து மூன்றரை வருடங்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார். இன்னமும் மூன்றரை வருடகாலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான் கூறுவது சரியா? (சபையார் 'ஆமென்' என்கின்றனர் -ஆசி) அச்சமயம் இந்த பிரபு தானியேலின் ஜனங்களுடன் அதாவது யூதர்களுடன் உடன்

படிக்கை செய்வான். அது மணவாட்டி எடுக்கப்பட்ட பிறகு சம்பவிக்கும். அவள் அதைக் காணமாட்டாள்.

342. கவனியுங்கள், தானியேலின் வாரத்தின் பிற்பகுதியில், ஜனங்கள் அந்தப் பிரபுவுடன் உடன்படிக்கை செய்கின்றனர். யூதர்களுடைய செல்வத்தைப் பறிப்பதற்காக இந்த உடன்படிக்கை செய்யப்படுகிறது. ஏனெனில் கத்தோலிக்க மார்க்கத்தாரும், யூதர்களும் உலகத்தின் செல்வம் முழுமையுமே கைப்பற்றியுள்ளனர்.

343. நான் வாடிகனுக்குச் (Vatican) சென்றபோது, அங்குள்ள மூன்று கிரீடங்களையும் கண்டேன். நான் போப்பாண்டவரை ஒரு புதன்கிழமை பகல் 3.00 மணிக்குப் பேட்டிக் காண பாரன் பான் ப்ளூம்பெர்க் (Baron Von Blumberg) ஒழுங்கு செய்திருந்தார்.

344. நான் ராஜாவிடம் அழைத்துச் செல்லப்பட்டபோது, என் கால் பட்டையி லுள்ள முன்கவசத்தை (cuffs) வெட்டி விட் டார்கள். அது பரவாயில்லை. ஆனால் நான் அவரைக் கண்டு திரும்பிவரும்போது, என் முதுகைக் காண்பித்து வரக்கூடாதாம். அது வும் பரவாயில்லை. ''அந்த மனுஷனுக்கு முன்பாக நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்.

345. அவர்கள், ''நல்லது, நீங்கள் உள்ளே சென்று முழங்காற்படியிட்டு அவருடைய (போப்பாண்டவர் - தமிழாக்கியோன்) விரலை முத்தம் செய்யுங்கள்" என்று கூறி னார்.

346. நான், "அது முடியாது. அது முடி யாது. இல்லை, ஐயா," என்றேன். 'சகோதரன்' என்று அழைக்கப்பட விரும்புகிறவர்களை நான் சகோதரன் என்று அழைப்பேன்.

'சங்கை' (Reverend) என்னும் பட்டப்பெயரால் ஒருவன் அழைக்கப்பட விரும்பினாலும் நான் அவனை 'சங்கை' என்று அழைப்பேன். ஆனால் ஒரு மனிதனைப் பணிந்து ஆரா தனை செய்யமாட்டேன். ஏனெனில் ஆரா தனை யாவும் இயேசுகிறிஸ்துவுக்கே உரியது. பாருங்கள்? இல்லை, இல்லை, ஐயா. ஒரு மனிதனின் கரத்தை முத்தம் செய்வது என்பது என்றால் முடியாது. ஆகவே, நான் அதைச் செய்யவில்லை.

347. ஆனால் வாடிகனை நான் சுற்றிப் பார்த்தேன். கோடி, கோடி, கோடிக்கணக்கான டாலர்கள் கொடுத்தாலும் அதை வாங்க முடியாது. நல்லது... ''உலகத்தின் செல்வங்கள் அனைத்தும் அவளிடத்தில் காணப்பட்ட தென்று'' வேதம் உரைக்கிறது. விலை மதிக்க முடியாத அந்த ஸ்தலங்களைப் பாவனை செய்து பாருங்கள்,

348. ருஷியாவில் கம்யூனிஸ்ட் தலை யெடுக்கக் காரணம் யாது? இன்று அநேக போதகர்கள் கம்யூனிஸத்துக்கு விரோதமாய் பிரசங்கிப்பதைக் கேட்கும்போது எனக்கு வயிறு குமட்டுகிறது. அவர்கள் எதைக் குறித்து காக்கையைப் போன்று கரைந்து கொண்டிருக்கின்றனர் (crowing) என்பதை அறியாமல் உள்ளனர். அது சரி. கம்யூனிஸம் என்பது ஒன்றுமில்லை. அது இப்பூமியில் சிந்தப்பட்ட பரிசுத்தவான்களின் இரத்தத்திற் காக பழிவாங்குவதற்கென்று தேவன் உப யோகிக்கும் ஒரு கருவியாக உள்ளது. அது சரி.

349. சபை எடுக்கப்பட்ட பின்னர், ரோமா புரியும் யூதரும் ஒருவரோடொருவர் உடன் படிக்கை செய்து கொள்வர். பரிசுத்த ஜனங் களோடு அவர்கள் உடன்படிக்கை செய்வார்க ளென்று வேதம் கூறுகிறது. ஏன்? அமெரிக்க தேசமும் ஏனைய நாடுகளும் பொருளாதார

சீர்குலைவு அடையும் நிலை வந்துவிட்டது. அதை நீங்கள் அறிவீர்கள். நம் கடனைத் தீர்க்க இன்னும் நாற்பது வருடகாலம் நம் வரிப்பணத்திலிருந்து செலுத்தப்படவேண்டு மானால், நமது நிலையென்ன?

350. நாணயங்களை வாங்கிக்கொண்டு பாண்டு பத்திரங்களைச் செலுத்துவதுதான் இதற்கு விமோசனம். நாம் அவ்வாறு செய்ய முடியாது. வால் ஸ்ட்ரீட் (Wall Street) தன் பணத்தையெல்லாம் சேமித்து வைத்துள்ளது. யூதர்கள்தான் வால் ஸ்ட்ரீட்டில் ஆதிக்கம் கொண்டுள்ளனர். அவர்கள் உலக வாணிபத் துறையில் ஈடுபட்டுள்ளனர். மீதியான செல் வம் அனைத்தும் வால் ஸ்ட்ரீட்டிலுள்ள யூதர்களிடம் உள்ளது. நாம் அவ்வாறு செய்ய முடியாது.

351. ஆகவே அவர்கள் அதைச் செய்வார் களானால் நீங்கள் நினைக்கின்றீர்கள்...

இப்படிப்பட்ட விஸ்கி மற்றும் புகையிலை வியாபாரிகள், வருடத்திற்கு கோடிக்கணக் கான டாலர்கள் சம்பாதித்து, பழைய ஆபாச புகைப்படங்களிலும், அதைப் போன்ற காரியங்களிலும் வருமான வரி ஏய்ப்பு செய்து விடுகிறார்கள். ஆகவே அங்கே அரிசோனாவிற்கு சென்று ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங் களை வாங்கி ஐம்பதாயிரம் டாலர்களுக்கு பெரிய கிணறுகளை வெட்டி அதை வருமான வரியில் சேர்த்து கணக்கு காட்டி வரி ஏய்ப்பு செய்கின்றனர். நீங்கள் உங்கள் வரியை செலுத்தாவிட்டால் உங்களை சிறையில் தள்ளி விடுவார்கள். ஆனால் அவர்கள் வரி ஏய்ப்பு செய்து, கிணறுகளை வெட்டி, பிறகு நிலத்தை சமன்படுத்தும் கருவிகளை (bulldozers) கொண்டு வருகின்றனர். ஆகவே, அவர்கள் என்ன செய்வர்? தாங்கள் சம்பா தித்த பணத்தின் மூலம் அடுத்த காலக் கட்டத் தில் அங்கே வீடுகள் கட்டும் திட்டங்களைக்

கொண்டு வருவர். அவர்கள் ஒரு முதலீட்டைச் செய்தாக வேண்டும். வீடுகள் கட்டும் திட்டங்களை அங்கே செயல்படுத்தி அவைகளை லட்சக்கணக்கான டாலர்களுக்கு விற்று விடுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட நபர்கள் பணத்தை மாற்றுவதற்கு உடன்படுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

352. இந்த நபர் செய்ததுபோல... அவன் பெயர் என்ன? காஸ்ட்ரோ (Castro) (க்யூபா தேசத்து ஜனாதிபதி) ஒரே ஒரு புத்தியுள்ள காரியத்தைச் செய்தான். அவன் பணத்தை திரும்பவும் அளித்து, பாண்டு பத்திரங்களைக் கிழித்துப்போட்டான்.

353. கவனியுங்கள், நாம் பணத்தை வாங்கி பாண்டு பத்திரங்கள் அளித்தால், மீண்டும் பணத்தைத் திரும்பக்கொடுத்து, பாண்டு பத்திரங்களை வாங்கிக்கொள்ள முடியாது. இந்தப் புள்ளிகள் (guys) அதை

அனுமதிக்கமாட்டார்கள். உலகிலுள்ள ஐஸ்வர்யமுள்ள வியாபாரிகள் அதை வைத்துள்ளனர்.

354. அதைச் செய்ய ஒரே ஒரு வழியுண்டு. ஆனால் கத்தோலிக்க சபை அவ்வாறு செய்ய முடியும். அவளிடம் போதிய பணம் உண்டு. அவர்களால் அதைச் செய்ய முடியும். அவள் அதை கண்டிப்பாக செய்வாள். அதற்கென்று அவள் யூதருடன் தன்னை ஒப்புரவு செய்து கொள்வாள். இந்த உடன்படிக்கை அவள் யூதருடன் செய்யும்போது.... இப்பொழுது ஞாபகங்கொள்ளுங்கள் இதை நான் வேத ஆதாரம் கொண்டு சொல்லுகிறேன்.... இந்த உடன்படிக்கையை அவள் செய்யும் போது, 'அவன் உபாயத்தினால் கைக்கூடி வரப்பண்ணுவான்' என்று தானி 8: 23, 25 உரைக்கின்றது. அவன் யூதர்களுடன் இந்த உடன்படிக்கையைச் செய்கிறான்.

355. ஆனால் யூதர்களின் செல்வம் அவன் கையில் சிக்கிக் கொண்ட பிறகு அந்த மூன்றரை வருடகாலத்தின் மத்தியில் அவன் உடன்படிக்கையை முறிக்கிறான். அவ்வாறு செய்யும்போது... ஓ... என்னே! ஓ... என்னே !

356. அவன் அந்திக்கிறிஸ்துவென்று முடிவு காலம்வரை அழைக்கப்படுகிறான். ஏனெனில் அவனும் அவன் பிள்ளைகளும் கிறிஸ்துவுக்கும் அவர் வார்த்தைக்கும் விரோ தமாய் இருப்பார்கள். அந்த மனிதன் அந்திக் கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்றான்.

357. இப்பொழுது, அவன் பணத்தை உடையவனாய் இருப்பான். அது அங் கிருந்துதான் வரும் என்று நான் நினைக் கிறேன். ஒரு நிமிடம் மட்டும்... நான் இதைக் கூறும்பொழுது, நான் இன்னும் ஒரு நிமிடத்தில் அதைக் குறித்து பின்நோக்கி செல்ல விரும்புகிறேன்.

358. அவன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். கடைசி காலம் வரையிலும் தேவனுடைய பார்வையில் அவன் அந்திக்கிறிஸ்து என்றே அழைக்கப்படுவான். இப்பொழுது, ஆனால் அவன் அப்பொழுது வேறொரு பெயரால் அழைக்கப்படுவான்.

359. **இப்பொழுது, செல்வத்தின் ஆதிக்கம் அவன் கையில் வந்தவுடன் யூதர்களுடன் அவன் செய்த உடன்படிக்கையை அவன் எழுபதாவது வாரத்தின் பாதியின் மத்தியில்** (கடைசி மூன்றரை வருஷத்தின் மத்தியில் - தமிழாக்கியோன்) **முறிப்பானென்று தானியேல் கூறுகிறான். அதன்பின், சகோதரனே, அவன் என்ன செய்வான். அச்சமயம், உலகத்தின் செல்வமனைத்தும் அவன் தன் ஆதிக்கத் தின்கீழ் கொண்டுள்ளதால், உலகிலுள்ள வாணிபமெல்லாம் அவன் கைக்குள் இருக்கும். இந்த சமயத்தில்தான், இரண்டு தீர்க்கதரிசிகள் காட்சியில் எழும்பி 1,44,000 பேரை அழைப்**

**பார்கள். அதன்பின்பு என்ன நேரிடும்? வெளி. 13-ல் கூறியுள்ள மிருகத்தின் முத்திரை போடப்படும். ஏனெனில் உலக வாணிப மெல்லாம் அவன் அதிகாரத்தில் இருக்கும். அதன்பின் என்ன சம்பவிக்கும்? "அந்த முத்திரையிடப்பட்டவன் அல்லாது வேறு யாரும் விற்கவோ கொள்ளவோ முடியாது." என்ற மிருகத்தின் முத்திரை உள்ளே வரும்.** (சகோ.பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டினார் - ஆசி)

360. **கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ்வமயம் சபையானது மகத்தான மூன்றரை வருடகாலம் மகிமையில் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இது நிகழும்போது, நாம் இவ்வுலகில் இருக்கமாட்டோம்.**

361. இப்பொழுது கவனியுங்கள்... சபைக் காலங்களின் கடைசியில் அவன்... அவனும் அவள் பிள்ளைகளும் அந்திக்கிறிஸ்துவென அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் கிறிஸ்து

வுக்கு விரோதமாயுள்ளவன் அந்திக்கிறிஸ்து வாவான். வார்த்தைக்கு விரோதமாயுள்ள எவனும் கிறிஸ்துவுக்கு விரோதமாயுள்ளான். ஏனெனில் கிறிஸ்துதான் வார்த்தை. இப் பொழுது அவன் அந்திக்கிறிஸ்துவாவான்.

362. வெளி. 12:7-9-ல் குற்றம் சாட்டு கிறவனாகிய சாத்தான் கீழே தள்ளப்படும் போது, நீங்கள் வேண்டுமானால் அதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதை படிக்க வேண்டுமென்று நான் விரும் புகிறேன். இப்பொழுது நமக்கு நேரமில்லை. பத்து மணிக்கு இன்னும் 20 அல்லது 15 நிமிடங்கள் உள்ளதால்... நம் சகோதரர் மேல் குற்றஞ்சாட்டுகிறவனாகிய பிசாசாகிய அந்த ஆவி - சாத்தான், சபை எடுக்கப்பட்ட பின்னர் தாழத்தள்ளப்பட்டான் என்று வெளி. 12:7-9 கூறுகின்றது. அது சரி.

363. **சபை எடுக்கப்படும்போது, சாத்தான் தாழத்தள்ளப்படுகிறான். சபை மேலே போகும்போது, சாத்தான் கீழே வருகிறான். பின்பு அவன் அந்திக்கிறிஸ்துவுக்குள் வாசம் செய்து "மிருகம்" என்று அழைக்கப்படுகிறான். வெளி. 13-ல் அவன் மிருகத்தின் முத்திரையைப் போடுகிறான். பாருங்கள்?**

364. ''தடை செய்கிற அவனால் மட்டுமே" (2 தெச. 2:7-சபை - தமிழாக்கியோன்) கிறிஸ்தவமானது தன் பரிசுத்தத்தில் இப்பொழுது பூமியின் மேல் விடப்பட்டுள்ளது.

365. ''தேவனுடைய ஆலயத்தில் அவன் உட்கார்ந்து தேவன் போல் தன்னைக் காண்பித்து, உலகில் மனிதருடைய பாவங்களை மன்னிப்பான்'' என்று தெசலோனிக்கேயர் நிரூபத்தில் கூறப்பட்டுள்ளதை நினைவில் கொள்ளுங்கள். அவன் வெளிப்படும் சமயம் வரும்வரை இது தொடர்ச்சியாக நடைபெற்று,

"அக்கிரமம் உலகில் மிகுதியாகும்." காரணம் அதுவரை அது அறியப்படாது.

366 அப்பொழுது சபையானது எடுக்கப் படும். அது எடுக்கப்பட்ட பின்னர், அவன் இப்பொழுதுள்ள அந்திக்கிறிஸ்துவிலிருந்து மாறுகிறான், ஓ, என்னே , “சபை, அந்த மகத்தான சபை”, அவன் அந்திக்கிறிஸ்து வினின்று மாறி “மிருகமென்று” அழைக்கப் படுகிறான், ஊ-ஊ இதை ஜனங்களுக்குப் புரிய வைக்க எனக்கு எத்தனை ஆவல்!

367 அந்திக்கிறிஸ்து என்பதும், மிருகம் என்பதும் ஒரே ஆவிதான் என்பதை ஞாப கங்கொள்ளுங்கள். அங்கே திரித்துவம் காணப்படுகிறது. ஆம், ஐயா, பிசாசின் வல்லமை மூன்று கட்டங்களில் வெளிப்படு கின்றது. நிக்கொலாய் ஆவி கிரீடம் சூட்டப்படுவதற்குமுன் அது மனிதனுக்குள் வாசம் செய்ய வேண்டும் என்பது நினை

விருக்கட்டும், பாருங்கள்? இப்பொழுது இதைக் கவனியுங்கள்! மூன்று கட்டங்கள் முதலாவது கட்டத்தில் அவன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். இரண்டாவது கட்டத்தில் அவன் கள்ளத்தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். மூன்றாவது கட்டத்தில் அவன் மிருகம் என்று அழைக்கப்படுகிறான்.

368 கவனியுங்கள், நிக்கொலாய் மதஸ்தரின் போதகம், அந்திக்கிறிஸ்துவின் போதகம், பவுலின் காலத்தில் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக எழும்பினது, அந்திக்கிறிஸ்து.

369 பின்பு அந்த போதகம் மனிதனான போது கத்தோலிக்க சபையின் குருக்களாட்சி (heirerchy) யைக் குறித்து பிரசங்கிக்கும் தீர்க்கதரிசியாக அவன் விளங்குகிறான்- கள்ளத்தீர்க்கதரிசி, போப்பாண்டவர்தான் தவறான போதகத்துக்குத் தீர்க்கதரிசி, ஆகவே

அதன் காரணமாக அவன் கள்ளத் தீர்க்க தரிசியாகிறான்,

370 மூன்றாம் கட்டத்தில் அவன் மிருகம் என்னும் பெயர் கொள்கிறான். அஞ்ஞான ரோமமார்க்கம் பெற்றிருந்த எல்லா வல் லமையும் ஒரு மனிதன் பெற்று முடிசூட் டப்படுகிறான். ஏனென்றால் ஏழு தலைக ளுள்ள மிருகம்-வலுசர்ப்பம், பரலோகத்தி லிருந்து தாழதள்ளப்பட்டு, இந்த கள்ள தீர்க்கதரிசிக்குள் வாசம் செய்கிறது. அந்த வலுசர்ப்பம் ஏழு தலைகளில் ஏழு கிரீ டங்களைச் சூடியிருந்தது அது பூமியிலும், சமுத்திரத்திலும் தள்ளப்படுகிறது. அது சரி,

371. நாம் என்ன சொல்லிக்கொண் டிருக்கிறோம்? யார் இந்த வெள்ளைக் குதிரையின் மேல் இப்பொழுது சவாரி செய்பவன்? அது யார் என்று அறிகிறீர்களா?

அவன்தான் சாத்தானின் பராக்கிரமசாலி (Superman).

372. ஒரு இரவு நான் இங்கு உட்கார்ந்திருக்கும் சகோ.நார்மன் (Bro. Norman), சகோ.பிரட் (Bro. Fred) இவ்விருவருடன், ஒரு மனிதன் அந்திக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிப்பதைக் கேட்கச் சென்றிருந்தேன். அவர் 'அசெம்பிளீஸ் ஆப் காட்' (Assemblies of God) என்னும் ஸ்தாபனத்தின் தலைசிறந்த போதகர். அவர் அந்திக்கிறிஸ்து யாரென் பதை இவ்விதம் விவரித்தார்: "அவர்கள் ஒருவிதமான வைட்டமினை மனிதனிலிருந் தெடுத்து அவனிலுள்ள அந்த ஜீவனை ஒரு பெரிய சொரூபத்திற்குள் மாற்றுவார்கள். அப்பொழுது அது ஒரு பட்டிணம் பூராவும் நிரப்பும் அளவிற்கு ஒரு பெரிய சொரூபமாக மாறும்.'' பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண் டதாக உரிமை பாராட்டும் ஒரு மனிதன்

இவ்வித தவறான நம்பிக்கை கொண்டிருக் கலாமா?

373. வேதம் அந்திக்கிறிஸ்து யாரென் பதை இங்கே தெளிவாக எடுத்துக் கூறு கின்றதே! அவன் ஒரு மனிதன். கவனியுங் கள். வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்பவன் சாத்தானின் பராக்கிரமசாலியல் லாமல் வேறு யாருமில்லை. பிசாசு அவ னுக்குள் வாசம் செய்யும் ஒருவன். அவன் கல்வியறிவு படைத்த நிபுணன். இப்பொழுது உங்கள் செவிகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று நான் நம்புகிறேன். அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவிருக்கின்ற, அந்தப் பதவிக்கு அந்த அடுத்த மனிதனைக் காட்டிலும், இந்த மனிதன் நுண்ணறிவு பெற்றவனா என்று காண்பதற்காக சில நாட்களுக்கு முன்பு பிசாசின் பிள்ளைகளில் ஒருவனை டெலிவிஷனில் சோதித்துக் கொண்டிருந்தார்கள். பாருங்கள்? ஆனால்

அவனிடம் மிகுந்த ஞானமுண்டு. சாத்தானும் அப்படியே. அவன் ஞானத்தை விற்க முயல்கிறான். அதை ஏவாளுக்கு அவன் விற்றான். நமக்கும் அதை அவன் விற்றுப் போட்டான். அதன் விளைவாக நாம் விரும்பியிருந்த பராக்கிரமசாலியை நாம் பெற்றுக்கொண்டோம். சரி. முழு உலகமே ஒரு பராக்கிரமசாலி வேண்டுமென்று விரும்பு கிறது. அவர்கள் அவனைப் பெற்றுக் கொள்வார்கள். சபை எடுக்கப்பட்டு சாத்தான் கீழே தள்ளப்படும்வரை சற்று காத்திருங்கள். சாத்தான் மனிதனுக்குள் வாசம் செய்வான். அது சரி. நன்கு பணிபுரிய அவர்களுக்கு ஒருவன் தேவைப்படுகிறது. அவர்கள் விருப் பப்படி அவன் செய்வான்.

374. கல்வியறிவு பெற்றவன்! சாத்தானின் பராக்கிரமசாலி கல்வியறிவு படைத்த, ஞானமுள்ளவனாய், தனக்குச் சொந்தமான சபை தத்துவத்தை உண்டாக்கிக்கொண்டு

ஸ்தாபனமாகிய வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்து மக்களை ஏமாற்றுகிறான். அவன் உலகிலுள்ள எல்லா மதங்களையும் ஜெயிப்பான். ஏனெனில் அவர்களெல்லாரும் உலக சபை மாநாட்டின் அங்கத்தினர்களாகி விடுவர். ஏற்கனவே அதற்கென்று கட்டிடங் கள் கட்டி, எல்லாம் ஆயத்தமாயிருக்கின்றது. இனி செய்ய வேண்டியது வேறொன்று மில்லை. எல்லா ஸ்தாபனங்களுக்கும் அந்த மாநாட்டில் புகுந்து விட்டன. அதற்கு ஆதரவளிப்பது யார்? ரோமபுரி தான். இப்பொழுது போப்பாண்டவர், 'நாமெல் லாரும் ஒன்று. ஆகையால் நாம் ஒன்றுபட்டு ஒன்றாக நடப்போம்' என்று அறை கூவுகிறார்.

375. முழு சுவிசேஷத்தைப் பின்பற்று பவரும்கூட அதில் சேர்வதற்கென தங்கள் சுவிசேஷ போதகங்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் என்ன செய் தனர்? அவர்கள் ஸ்தாபனத்தின் காரியங்

களைக் காணக்கூடாதவாறு குருடாராகி இருக்கின்றனர். அவர்கள் சத்தியத்தைப் புறக் கணித்து விட்டனர். சத்தியம் அவர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டது. ஆனால் அவர்களோ அதை விட்டகன்றனர். இப்பொ ழுது "பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக அவர் கள் கொடிய வஞ்சகத்தால் பீடிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாகின்றனர்.'' அவர்கள் சரி யாக அவ்விதமே உள்ளனர்.

376. அந்திக்கிறிஸ்து அவர்களெல்லாவற் றையும் தன் அதிகாரத்துக்குட்படுத்துகிறான். உலகத்தோற்றத்துக்கு முன்னால் இந்த முத் திரைகளின் புத்தகத்தில் பெயரெழுதப்படாத பூமியின் குடிகள் எல்லோரையும் அவன் ஏமாற்றினான் என்று வேதம் கூறுகின்றது. (சகோ. பிரன்ஹாம் ஒருமுறை தன் கரங் களைக் கொட்டினார் - ஆசி) ஹும் 'அவன் ஏமாற்றினான்' என்று வேதம் கூறினால்,

அவன் நிச்சயமாக ஏமாற்றினான் என்பதாகும்.

377. நான் இன்னின்ன ஸ்தாபனத்தை சேர்ந்தவன் என்று அவர்கள் சொல்லுகின்றனர். ஆம் அது தான் சரியாக வேசியின் ஸ்தாபனம். அது தொடங்கப்பட்ட நாள் முதற்கொண்டு முழுவதும் அந்திக்கிறிஸ்துவின் ஆதிக்கத்தில் உள்ளது.

378. நான் அதனின்று கேள்விப்படுவேன். ஆனால் அது... அது சத்தியமாயிருக்கின்றது. நான் எதிர்ப்பார்க்கிறேன். ஆமென்.

379. இப்பொழுது கவனியுங்கள். அவன் ஜெயிப்பான். அவன் மிருகமாக மாறு முன்பே, இப்பொழுதே அவன் ஜெயித்து எல்லாவற்றையும் தன் ஆதிக்கத்தில் வைத்துள்ளான் என்பதைப் பாருங்கள்.

**கொடூர தண்டனை என்னவென்பதைக் காணவேண்டுமானால் சற்றுப்பொறுங்கள்.** (சகோ.பிரன்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டுகிறார் - ஆசி) **பூமியில் கைவிடப்பட்ட வர்கள் என்னவிதமான கொடூரத்தை அனு பவிக்கப் போகின்றனர் என்பதை அப்பொழுது காணலாம்.** ஹூம். "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகும். மணவாட்டி எடுக் கப்பட்ட பின்பு, வலுசர்ப்பம் (ரோமாபுரி) தன் வாயிலிருந்து வெள்ளத்தை கைவிடப்பட்ட ஸ்திரீயின் சந்ததியின் மேல் ஊற்றி, அவ ளுடன் போர் செய்கின்றது. அவள் உள்ளே பிரவேசிக்க விருப்பங்கொள்ளவில்லை. ஆகையால் அவள் மிருகத்தை போன்று வேட்டையாடப்படுவாள்" (வெளி.12:13,17).

380. **ஆனால் மணவாட்டி தேவனுடைய கிருபையினால் இரத்தத்தின் கீழ் இருந்ததால், அவள் இதை அனுபவிக்க வேண்டிய அவசிய மில்லாமல் போயிற்று. அவளுக்கு உபத்திரவ**

**காலம் கிடையவே கிடையாது. இனிமேல் சபைக்கு அடுத்ததாக நிகழவேண்டியது எடுக்கப்படுதலாகும். ஆமென்! ஆமென்!** இதை நாம் தொடர முடியும் (பேச முடியும் - தமிழாக்கியோன்) ஓ! இது எனக்கு எவ்வளவு பிரியமாயிருக்கிறது!



# அந்திக்கிறிஸ்து யார்?

| | |
|---|---|
| V | 5 |
| I | 1 |
| C | 100 |
| A | 0 |
| R | 0 |
| I | 1 |
| V | 5 |
| S | 0 |
| | |
| F | 0 |
| I | 1 |
| L | 50 |
| I | 1 |
| I | 1 |
| | |
| D | 500 |
| E | 0 |
| I | 1 |
| | |
| **Total** | **666** |

## VICARIVS FILII DEI

THE LITERAL MEANING:

| VICARIVS | Substituting for, or in place of |
|---|---|
| FILII | means Son |
| DEI | means God |

''அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் ''அறுநூற்றறுபத்தாறு'' என்று வேதம் கூறியுள்ளது. வாடிகனின் எழுதப்பட்ட VICARIVS FILII DEI என்ற லத்தீன் சொற்களில் காணப்படும் ரோம எழுத்துக்களின் எண்ணிக்கையை (உதாரணமாக 'V' க்கு 5, 'I'க்கு 1) கூட்டினல் 666 என்ற எண் கிடைக்கின்றது.

செய்தி: இரண்டாம் முத்திரை


# இரண்டாம் முத்திரையின் இரகசியம்



இப்பொழுது கவனியுங்கள். 'இரத்தச் சாட்சிகள்' என்னும் புஸ்தகத்திலிருந்து இதை நான் எடுத்துக் கூறுகிறேன்: ''பரி. அகஸ்டின் காலத்திலிருந்து 1586 வரை ரோமன் கத்தோலிக்க சபை 6,80,00,000 பிராடெஸ்டெண்டுகளை கொலை செய்துள்ளது''. அப்படியானால் அவன் பட்டயம் சிவப்பாயுள்ளதா? அவன் சிவப்பு நிறமுள்ள குதிரையின் மேல் சவாரி செய்கின்றானா? அது என்ன? அதே ஆதிக்கம்! அதே ஆள்! அதுதான் இந்த முத்திரையின் இரகசியம். இரத்த சாட்சிகளாக மரித்தவர் மாத்திரம் 6,80,00,00 பேர் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர், அதுவுமல்லாமல், கொலை செய்யப்பட்டவர் இன்னும் எத்தனையோ பேருண்டு. எவ்வளவு பயங்கரம்! இருளின் காலங்களில் கத்தோலிக்கர் கொள்கைகளை ஏற்காத லட்சக்கணக்கானவர் சிங்கங்களுக்கு இரையா யினர்! அல்லாமலும் இன்னும் அநேக விதங்களில் அவர்கள் கொலை செய்யப் பட்டனரென்று உங்களுக்குத் தெரியுமா!

செய்தி: இரண்டாம் முத்திரை

# கொள்ளவும் விற்கவுங் கூடாதபடி




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து